*This question paper contains 2 printed pages.* **Your Roll No.** ........................

| | | |
|---|---|---|
| *Sl. No. of Ques. Paper* | : **5141** | **G** |
| *Unique Paper Code* | : **208162** | |
| *Name of Paper* | : **Functional Grammar and Skills of Language** | |
| *Name of Course* | : **B.A. (Prog.) Tamil – B** | |
| *Semester* | : **I** | |
| *Duration :* | : **3 hours** | |
| *Maximum Marks* | : **75** | |

*(Write your Roll No. on the top immediately on receipt of this question paper.)*

I. எவையேனும் இரு வினாக்களுக்கு விடை தருக: 7.5 x 2=15

1. எழுத்து என்றால் என்ன? விவரிக்க.

2. மெய்யெழுத்து என்றால் என்ன? சான்று தந்து விளக்குக.

3. சார்பெழுத்துக்களை விவரிக்க.

4. மொழிக்கு இடையில் வரும் எழுத்துகளைச் விளக்குக.

5. உயிர்மெய், ஆய்தம் இவற்றை விவரிக்க.

II. எவையேனும் இரு வினாக்களுக்கு விடை தருக: 5 x 2=10

1. பெயர்ச்சொல் என்றால் என்ன? விவரிக்க.

2. இயற்சொல் என்றால் என்ன? சான்றுகளுடன் விளக்குக.

3. திரிசொல் என்றால் என்ன? எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.

4. வடசொல்லைச் சான்றுதந்து விளக்குக.

III. எவையேனும் இரு வினாக்களுக்கு விடை தருக: 5 x 2=10

1. விகாரப் புணர்ச்சியை விளக்குக.

2. இயல்புப் புணர்ச்சி என்றால் என்ன? விவரிக்க.

3. வல்லினம் மிகும் இடங்களைச் சான்றுதந்து விளக்குக.

4. நேர்க்கூற்று வாக்கியத்தைச் சான்று தந்து விவரிக்க.

IV. கடிதத்தின் அமைப்பு மற்றும் வகைகளை விவரிக்க. 10

(அல்லது)

பத்திரிகையில் வந்த விளம்பரத்தின் அடிப்படையில் இன்போசிஸ் நிறுவனத்தின் வரவேற்பாளர் பதவிக்கு அந்நிறுவன மக்கள் தொடர்பு அதிகாரிக்கு ஒரு விண்ணப்பம் வரைக.

V. உரையாடலின்போது கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகள் யாவை? 10

(அல்லது)

இரயிலில் பயணி ஒருவரிடம் உதவி கேட்கும் விதத்தில் அமைந்த ஓர் உரையாடலை எழுதுக.

VI. பல்பொருள் குறித்த ஒருசொல் என்றால் என்ன? சான்று தந்து விளக்குக. 10

(அல்லது)

ஒருசொல் குறித்த பல சொற்களை விவரிக்க.

VII. கீழ் வரும் பத்தியைப் படித்துக் கேட்கப்பட்டுள்ள கேள்விகளுக்குச் சுருக்கமாக விடைதருக. 10

தமிழர்கள் தங்களுடைய முன்னோர்களுக்கும் வழிபாடு நடத்தியுள்ளனர். இது இன்றுகூட நம்மிடையே நிலவும் மரபு ஆகும். இது திருவள்ளுவர் காலத்திலும் இருந்தது. அவர் காலத்தில் இல்லறத்தில் ஈடுபட்டோர், முன்னோர்களை நினைவு கூர்ந்திட வேண்டும் என்பது ஒரு சமுதாயக் கட்டளை ஆகும். அதியமான் நெடுமான் அஞ்சி இறந்தபோது அவனுடைய நினைவு நாளன்று அவனுடைய விருந்தோம்பல் பண்பினை நினைவு கூர்ந்து ஔவையார் நெஞ்சுருகப் பாடுவது நினைவு கூரத்தக்கது. இம்முன்னோர் வழிபாட்டினைத் 'தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு ஐம்புலத்தாறு ஓம்பல் தலை' என்னும் திருக்குறளில் வலியுறுத்துகிறார். முன்னோர் வழிபாட்டினைப் பின்பற்றிய அக்காலத் தமிழர், அம்முன்னோரின் நினைவாக அவர்களைப் புதைத்த இடத்தில் நடுகல் நடுவது வழக்கம்.

1. திருவள்ளுவர் காலத்தில் இருந்த முன்னோர் வழக்கம் எப்படி இருந்தது?

2. ஔவையார் யாருடைய நினைவாக எதனைப் பாடினாள்?

3. திருவள்ளுவர் திருக்குறளில் முன்னோர் வழிபாட்டை எவ்வாறு வலியுறுத்துகிறார்?

4. நடுகல் யாருக்காக நடப்பட்டது?

5. இப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பைச் சூட்டி, அப்பத்தியின் மையக்கருத்தை எழுதுக.



100